إدارة انوار الصفة لمكاتب الدينيات – تامل نادو
அன்வாருஸ் ஸுஃப்பா தீனியாத் மக்தப் வழிகாட்டி
ANWARUS SUFFA DEENIYAT MAKTHAB GUIDANCE.
10/1-B, Aanaikar Complex, M.V. Badran Street, Periamet, Chennai – 600 003.

படிவம் எண் : 13

# மக்தப்களின் அறிக்கை விவரம்

1. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் அடுத்த மாதத்திற்கான முன் பயணத் திட்டங்களை மக்தபின் பொறுப்பாளர்களுடன் ஆலோசித்து அமைத்தல்.

2. மக்தபை ஆய்வு செய்வதற்கு செல்லும் முன், அங்குள்ள மக்தப் மேம்பாட்டுக் குழு மற்றும் ஆசிரியர்களுக்கு முன் அறிவிப்பு செய்தல்.

3. மக்தப் ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன் செல்லுதல். (மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகிறார்களா? என்பதை ஆய்வு செய்ய இலகுவாக இருக்கும்.)

4. பாடங்களைப் பற்றி ஆய்வு செய்தல்.

5. மக்தபின் அழகிய சூழலைக் கவனித்தல்.

6. கற்பிக்கும் முறைகளை கவனித்தல்.

7. மாணவர் மற்றும் ஆசிரியர் வருகைப் பதிவேட்டை கவனித்தல்.

8. மாதந்தோறும் கொடுக்கப்பட்ட பாட அளவு பூர்த்தி செய்யப்படுகிறதா? என்பதை கவனித்தல்.

9. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கையொப்பம் இடுகிறார்களா? என்பதை கவனித்தல்.

10. தொழுகை மற்றும் வருகை பதிவேட்டை கவனித்தல்.

11. வாரம் ஒரு முறை தொழுகைப் பயிற்சி கொடுக்கப்படுகிறதா? என்பதை கண்காணித்தல்.

12. வீடுகளில் தீனுடைய சூழ்நிலைப் பற்றி மாணவர்களிடம் விசாரித்து ஆர்வமூட்டுதல்.

13. அனைத்து வகுப்புகளையும் ஆய்வு செய்தல்.

14. மாணவர்கள் படித்ததைக் கொண்டு அமல் செய்கிறார்களா? என்பதை கவனித்தல்.

15. மக்தபை ஆய்வு செய்த பிறகு மக்தப் செக் லிஸ்டை (ஆய்வு அறிக்கையை) வைத்து ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர்களிடம் கலந்து ஆலோசனை செய்தல்.

16. மக்தபை ஆய்வு செய்யும் போது மக்தப் பொறுப்பாளர்களை அவசியம் இருக்கச் செய்தல்.

17. ஆசிரியர் மற்றும் மக்தப் பொறுப்பாளர்களிடம் பேசிய ஆலோசனைகளை பற்றி மக்தப் அறிக்கையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதுதல்.

18. மக்தப் அறிக்கையில் வந்த நேரம் மற்றும் சென்ற நேரத்தைக் குறிப்பிடுதல்.

19. மக்தபில் அடுத்து கவனம் செலுத்த வேண்டிய செய்திகளை மக்தப் செக் லிஸ்டில் (மக்தப் ஆய்வு அறிக்கையில்) எழுதுவதுடன் தனது அறிக்கையிலும் எழுதிக் கொள்ளுதல். தொடர்ச்சி

**20.** மக்தபை முழுமையாக ஆய்வு செய்த பிறகு, மக்தபின் தரத்தைப் பற்றி A. B. C. என குறிப்பிடுதல்.

**21.** இரண்டாவது முறை ஆய்வு செய்யும் பொழுது முதல் முறையில் முடிவான ஆலோசனைகளை முன் வைத்து ஆய்வு செய்தல்.

**22.** மேற்கூறப்பட்ட அனைத்து செய்திகளும் மக்தப் அறிக்கையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் இடம் பெற வேண்டும்.